செ. கு. எண்:298 நாள் :12.11.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.11.2013

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பெருநகர் ஊராட்சியில் தினக் கூலியாக பணி புரிந்து வந்த திரு. மோகன் என்பவர் 19.9.2013 அன்று பெருநகர் கிராமத்திலுள்ள மின்கம்பத்தில் ஏறி மின்விளக்கை பொருத்தும் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, அண்ணா நகர், சென்னை மாநகராட்சி தெரு விளக்கு மின்பராமரிப்பு அலுவலகத்தில் மின்கம்பியாளராகப் பணி புரிந்து வந்த, சென்னை, அம்பத்தூர் மேற்கு, பானு நகரைச் சேர்ந்த திரு. ஜி.ராமகிருஷ்ணன் என்பவர் 22.9.2013 அன்று அண்ணா நகர், 4-வது அவென்யூவில் பழுதடைந்த தெரு விளக்கினை சரி செய்யும் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், வேளச்சேரி பிரிவில் தினக்கூலியாகப் பணி புரிந்து வந்த திரு. ராமச்சந்திரன் என்பவர் 12.10.2013 அன்று வேளச்சேரி பிரதான சாலையில் மின்சார கேபிள் பதிக்க பள்ளம் தோண்டிய போது மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9